

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (02-09-2026) சென்னை – சேத்துப்பட்டில் நடைபெற்ற, கழகத் தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினரும் புரசைவாக்கம் கூட்டுறவு வங்கியின் முன்னாள் தலைவருமான கோ. நடராசன் – திருமதி அஞ்சம்மாள் இணையரின் மகன் வழிப் பேரனும், அண்ணா நகர் தெற்கு பகுதி பிரதிநிதி ந.செந்தில்குமார் – மீனாட்சி இணையரின் மகனுமான ந.செ. விக்னேஷ் – கி. அபிநயா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழா வரவேற்பில் திருமதி துர்கா ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் பி.வில்சன், டாக்டர் கலாநிதி வீராசாமி, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எம்.கே. மோகன், ந.இராமலிங்கம், ச.பரமசிவம் உள்ளிட்ட கழகத்தினர், மணமக்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

### கச்சத்தீவை நாங்கள் கொடுக்கவில்லை!

# கச்சத்தீவை மீட்க பேரவையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றினோம்!

## சட்டப்பேரவையில் கழகக் கொறடா எ.வ.வேலு விளக்கம்!

சென்னை, செப். 4-

கச்சத்தீவை நாங்கள் (தி.மு.க.) கொடுக்கவில்லை, அவர்கள் (காங்கிரஸ்) கொடுத்தது என்றும் கச்சத்தீவை மீட்க கலைஞர் பேரவையில் பல தீர்மானங்களை நிறைவேற்றினார் என்றும் சட்டபேரவையில் கழக கொறடா எ.வ.வேலு விளக்க மளித்து பேசினார்.

சட்டப்பேரவையில் கச்சத்தீவு பிரச்சினை பற்றி அமைச்சர் நிர்மல்குமார் பேசியதற்கு பதிலளித்து கழகக் கொறடா எ.வ.வேலு பேசியதாவது:



பேரவைத் தலைவர் அவர்களே கச்சத்தீவைப் பொறுத்தவரை இந்த மாமன்றத்தில் பலமுறை விவாதித்திருக்கிறோம். கச்சத்தீவை கொடுத்தது என்பது அப்போது காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவியாக இருந்த பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் கொடுக்கப்பட்டது.

அது கொடுத்தது தவறு - கலைஞர் முதலமைச்சராக இருக்கும் பொழுதே இதே மாமன்றத்தில் பலமுறை நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றி, மீட்டெடுக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம். ஆனால் கச்சத்தீவை நாங்கள் கொடுக்கவில்லை. அவர்கள்தான், கொடுத்து விட்டார்கள்.

இந்த விஷயத்தில் ஒன்றிய அரசை ஒட்டித்தான் மாநில அரசாங்கம் பல்வேறு கருத்துகளை பரிமாறிக் கொள்கிறோம். மீண்டும் நாம் கச்சத்தீவை அவர்களிடத்தில் கேட்டோம். ஆனால் இதுவரைக்கும் கிடைக்கவில்லை. அது தான் உண்மை!

இவ்வாறு கழகக் கொறடா எ.வ.வேலு பேசினார்.

# பேட்டை பகுதியில் கலைஞர் 8 ம் ஆண்டு நினைவு புகழஞ்சலி பொதுக்கூட்டம்!

## மாவட்ட அவைத் தலைவர் முருகன் தலைமை! மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. – சிவாஜி கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

நெல்லை, செப். 4 -

நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு புகழஞ்சலி பொதுக் கூட்டம், நெல்லை மத்திய மாவட்டம், நெல்லை பேட்டை முனிசிபல் பஸ் நிலையம் அருகில், நெல்லை மத்திய மாவட்ட அவைத்தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்று கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சாதனைகளையும், பல்வேறு திட்டங்களையும் எடுத்துக் கூறியும், நடைபெற்று வரும் த.வெ.க. ஆட்சியின் நிர்வாக சீர்கேட்டையும், விலைவாசி உயர்வினால் மக்கள்படும் அவதிகளையும் விரிவாக எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்கள்.

### சட்டப் பேரவையில்

# வனத்துறை அமைச்சருக்கு பாடம் எடுத்த முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு!

## தவறான கருத்தை அமைச்சர் வெளியிடுவதா என கேள்வி!

சென்னை, செப். 4-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று வனத்துறை சார்ந்த கேள்வி பதில் நேரத்தில் பேசிய தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், கேரளாவில் காட்டுப்பன்றி வனவிலங்கு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும், அதேபோல் தமிழ்நாட்டிலும் காட்டுப்பன்றியை வனவிலங்கு பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் அல்லது அவற்றை சுட்டுக்கொல்ல உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கையை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த வனத்துறை அமைச்சர் ரஞ்சித் குமார், விவசாயிகளே சில இடங்களில் காட்டுப்பன்றிகளைச் சுடுகிறார்கள்; அதனை நாங்கள் கண்டுகொள்வதில்லை என்ற தவறான கருத்தை அவையில் பதிவு செய்தார்.



இதையடுத்து, அமைச்சரின் பதிலில் இடம் பெற்ற இந்தக் கருத்தைச் சுட்டிக் காட்டிப் பேசிய முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, விவசாயிகளே பல இடங்களில் காட்டுப்பன்றிகளைச் சுடுகிறார்கள்; ஆனால் நாங்கள் அதைக் கண்டு கொள்வதில்லை என்று அமைச்சர் கூறியிருப்பது, பொதுமக்கள் மத்தியில் மிகவும் தவறான கருத்தை உருவாக்கிவிடும்.

ஏனெனில், வன உயிரினங்கள் அனைத்தும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972ன் கீழ் பாதுகாக்கப்படும் உயிரினங்கள் பட்டியலில் இருப்பவை. எனவே காட்டுப்பன்றியாக இருந்தாலும் சரி, வேறு எந்த வனவிலங்காக இருந்தாலும் சரி, அவை பாதுகாக்கப்பட்ட உயிரினங்களாக இருக்கும்போது, அவற்றை சுட்டுக் கொல்லப்படுவதை நாங்கள் கண்டுகொள்வதில்லை; துறை அதிகாரிகளும் கண்டுகொள்வதில்லை என்று வனத்துறை அமைச்சர் இந்த அவையில் கூறுவது தவறான கருத்தை வெளியில் ஏற்படுத்திவிடும்.

மேலும், இந்தக் கருத்து வனவிலங்கு ஆர்வலர்கள் மத்தியிலும், சட்டத்தின் அடிப்படையிலும், இந்த அரசின் மீது தவறான புரிதலை ஏற்படுத்தக்கூடும் என்ற நல்ல நோக்கத்தோடு சுட்டிக்காட்டுகிறேன். எனவே அந்தக் கருத்து அவைக் குறிப்பில் இடம் பெறக் கூடாது என்பதையும் அவையின் கவனத்திற்கு கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இதையடுத்து, தங்கம் தென்னரசு சுட்டிக் காட்டிய கருத்து அவைக் குறிப்பில் இருந்து நீக்கப் படுவதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தெரிவித்தார்.

### ரீல்ஸ் போடுவதற்காகத்தான்

# கச்சத்தீவுப் பிரச்சினையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்!

## சட்டப்பேரவையில் முனைவர் கோவி. செழியன் பேச்சு!

சென்னை, செப். 4-

சட்டப்பேரவையில் முனைவர் கோவி.செழியன் பேசுகையில், ஆளுங்கட்சியினர் ஒரு ரீல்ஸ் போடுவதற்காகத்தான் கச்சத்தீவுப் பிரச்சினையை பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் கச்சத்தீவு பிரச்சினை குறித்து அமைச்சர் நிர்மல் குமார் பேசியதற்கு முனைவர் கோவி.செழியன் அளித்த பதில் வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உறுப்பினர் படகுப் பிரச்சினையைப் பற்றித்தான் பேசினார். மாறாக நீர்ப்பாசனத் துறை அமைச்சர் எழுந்து கச்சத்தீவு என்று ஓப்பன் செய்தார். அவர் ஓப்பன் செய்துவிட்டு சிரித்துக் கொண்டிருந்த காட்சியும் தெரியும். மாறாக சட்டத் துறை அமைச்சர் எழுந்து நீண்ட நெடிய நேரம் பேசி இருக்கிறார்.



ஒரு உண்மை புரிகிறது. விவாதம் முறையாக சரியாக போய் கொண்டிருப்பதை திசை திருப்ப வேண்டுமேயானால் ஒரு தலைப்புச் செய்தி சொல்ல வேண்டும், அதையொட்டி சட்ட அமைச்சர் கருத்து சொல்ல வேண்டும், நாங்கள் எழுந்து நின்று அதற்கு எதிர்வினையாற்ற வேண்டும். அது புகைப்படம் எடுக்கப்பட்டு, அது வெளியிலே அவர்கள் அமைதியாக பேசுவதைப் போலவும் தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து கொந்தளிப்பது போலவும் ஒரு ரீல்ஸ் போடுவதற்காகத்தான் கச்சத்தீவுப் பிரச்சினையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர அது காட்சிப்படுத்த அல்ல.

எனவே எங்கள் பகுதியை காட்டுகின்ற அதே நேரத்தில் ஆளுங்கட்சியினுடைய இருப்பையும் காட்டினால்தான், அவர்கள் செய்கிற செயல் வெளியே தெரியும். எனவே ஒருதலைப்பட்சமாக ஒளிபரப்புவதை சபாநாயகர் தலையிட்டு கூர்ந்து கவனித்து இரு பக்கமும் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முனைவர் கோவி.செழியன் பேசினார்.


